**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 275/2015**

Deposition of the witness for Prosecution **PW8**
Name : குமார்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (12.05.2026)

A1 to A3, A6 present, A4, A5 absent, petition filed and allowed.

**VC Start Time : 01.20 PM**

முதல் விசாரணை

நான் தற்போது சேலம் மாவட்ட சி.பி.சி.ஐ.டி. பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2012 ஆம் தேதி அச்சம்புதூர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். தலைமை காவலர் செல்வி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண். 21/2012 வழக்கு கோப்பினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 28.09.2012 ஆம் தேதி 14.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று காட்சிகள் பச்சையப்பன், செல்வம் ஆகியோர் முன்னிலையில் பார்வை பகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். சாட்சிகள் ஈஸ்வரி என்ற ரேவதி, செல்வம், பச்சையப்பன், குருவம்மாள், செல்லையா, காந்திமதி, தலைமை காவலர் செல்வி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து. 15.10.2012 ஆம் தேதி குற்றாலம் காவல் ஆய்வாளர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டதால் வழக்குப் கோப்பினை நிலைய கோப்பில் ஒப்படைத்தேன் .

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்த தேதியானது **28.09.2012** ஆம் தேதி **14.00** மணிக்கு என்றால் சரிதான். தலைமை காவலர் செல்வி புகாரினை பெற்றது **28.09.2012** ஆம் தேதி அதே **14.00** மணி என்றால் பார்வை மகஜரில் **14** மணி என்று தவறுதலாக போட்டுள்ளார்கள். தவறுதலாக போட்டுள்ளதை திருத்தி நான் மேலொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வது பொய் என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.**1** எனது விசாரணையில் **1** வது எதிரிக்கும், தனக்கும் குற்றாலம் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாக சொல்லி உள்ளார் அதற்கான ரசீதினை பெற்று இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் இந்த வழக்கில் முதல் கட்ட விசாரணை செய்ததால் கைப்பற்றவில்லை. ஒன்னாவது எதிரிக்கு சொந்த ஊர் சுந்தரபாண்டியபுரம் என்றால் சரிதான். தலைமை காவலர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் **10.05.2011** ஆம் தேதி ஒன்னாவது எதிரி, ஏழாவது எதிரியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்று, அதனை அ.சா.**1**, ஒன்னாவது எதிரி வீட்டிற்கு சென்று சொன்னதாக முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் தயார் செய்த மாதிரி வரைபடம், பார்வை மகஜரில் சம்பவ இடம் மெஞ்ஞானபுரத்தில் வைத்து நடந்ததாக தயார் செய்துள்ளது என்றால் மனுதாரர் திருமணத்திற்கு பின்பு அங்கே எதிரிகள் இருப்பதாக கூறினார்.

எனது விசாரணையில் அ.சா.**1** சுந்தரபாண்டியபுரத்தில் எவ்வளவு நாள் எதிரியுடன் குடும்பம் நடத்தி வந்தார் என்று துலங்குமா என்றால் துலங்கவில்லை. எனது விசாரணையில் அ.சா.**1** சுந்தரபாண்டியபுரத்தில் எதிரிகளுடன் குடியிருந்து வந்த பொழுது வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்ததாக எந்த காவல் நிலையத்திலும் புகார் கொடுத்ததாக துலங்காது என்றால் சரிதான். அ.சா.**1** எனது விசாரணையில் **15** பவுன் நகை சொல்லியுள்ளதில் அந்த நகைகள் எந்த கடையில், எங்கு வாங்கினார்கள் என்று ரசீது எதனையும் நான் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.**1** விசாரணையில் **1** வது எதிரி உடலில் தீயால் சுட்டதாக சொல்லியுள்ளார் அது உடலில் எந்த பகுதி என்று சொல்லவில்லை, போலீசில் அது குறித்து புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.**1** எதிரிகளுடன் மெஞ்ஞானபுரத்தில் கூட்டுக்குடும்பமாக எத்தனை வருடம் வாழ்ந்தார் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. ஒன்னாவது எதிரி நித்யாவை எங்கு வைத்து, எந்த தேதியில் திருமணம் செய்து கொண்டார் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அதேபோல் இரண்டாவதாக எந்த முறைப்படி திருமணம் செய்து கொண்டார்கள் என்று துலங்காது என்றால் சரிதான். ஒண்ணாம் எதிரி இரண்டாவது திருமணம் செய்து கொண்டது சம்பந்தமாக மேலமெஞ்ஞானபுரத்தை சேர்ந்த நாட்டாமையை விசாரித்து வாக்குமூலம் எதுவும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். உறுதி செய்வதற்காக சம்பவம் நடந்த பக்கத்து வீட்டுக்காரர்களை யாரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

அ.சா.**1** எனது விசாரணையில் ஒன்னாவது எதிரி நித்யாவை தாலி கட்டும்போது நேரில்

பார்த்ததாகவும், மணக்கோலத்தில் இருந்ததாகவும் துலங்காது என்றால் சரிதான். 10.05.2011 ஆம் தேதி நடைபெற்ற மிரட்டல் சம்பவத்திற்கு 28.09.2012 ஆம் தேதி சுமார் ஒன்றரை வருடம் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளார்கள் அதற்கான காரணம் எதுவும் எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 க்கும், ஒன்னாவது எதிரிக்கும் 2000 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று 2010 ஆம் ஆண்டு அவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு பிரிந்துள்ளார்கள் அதற்கிடையில் வாழ்ந்த காலத்தில் வரதட்சனை கேட்டு கொடுமை செய்ததாக எந்த காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கும், ஒன்னாவது எதிரிக்கும் இடையே நடந்த திருமணம் காதல் திருமணம் ஆகிவிட்டது என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும் என்று உள்ளது அதில் எதுவும் நிரப்பப்படவில்லை என்றால் அதனை முதல் தகவல் அறிக்கை தான் கேட்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நபர் லேட்டாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் அது சம்பந்தமாக நான் விசாரணை செய்தேனா என்றால் அது எனக்கு தெரியாது.

மாதிரி வரைபடம், பார்வை மகஜர், சாட்சிய வாக்குமூலங்கள் 28/9/2012 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது நீதிமன்றத்திற்கு 11.9.2015 ஆம் தேதி சுமார் மூன்று ஆண்டு காலம் கால தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது அதற்கான காரணம் என்னவென்றால் நான் பத்து நாட்கள் மட்டும் தான் பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 2013 ஆம் ஆண்டு நான் பணி மாறுதலாகி விட்டேன். பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் சம்பவ இடம் சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையிலேயே சம்பவ இடத்தை பார்வையிட்டு நான் விசாரணை மேற்கொண்டு இருந்தால் சம்பவமானது சுந்தரபாண்டியபுரத்தில் நடந்ததா இல்லை மேல மெஞ்ஞானபுரத்தில் நடந்ததா என்று எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. அ.சா.1 குடும்ப பிரச்சினை காரணமாக எனது உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுக்கப்பட்டதில் உயர் அதிகாரிகளின்

அழுத்தத்தின் காரணமாக தலைமை காவலர் பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒருதலைப் பட்சமாக விசாரணை செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>VC End Time : 01.50 PM</u>**

Taken down by me / before me through teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai